மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம்
முன்னிலை – திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
(திருவள்ளுவர் ஆண்டு 2056 விஸ்வாவசு, வருடம், மார்கழி மாதம் 21–ம் நாள்)
2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05–ம் நாள் திங்கட்கிழமை

**<u>வழக்கிடை மனு எண். 537/2019</u>**
**<u>in</u>**
**<u>அசல் வழக்கு எண். 15/2011</u>**

1. குப்பம்மாள்
2. K.S. நாகராஜன்
3. K.S. கமலகண்ணன்
4. K.S. பிரபாகரன்
5. A. கருணாகரன்

பை பொது அதிகார முகவர் 2 ம் வாதி (K.S. நாகராஜன்) ....மனுதாரர்கள்
/வாதிகள்

.....எதிர்.....

1. தசரதன்(இறந்துவிட்டார்)
2. எல்லப்பன் (இறந்துவிட்டார்)
3. அமிர்தம்மாள்
4. பானுமதி
5. கிருஷ்ணசாமி
6. அஞ்சலம் .... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள்
7. ஷேசம்மாள்
8. முத்துலட்சமி
9. கோவிந்தம்மாள்
10. பூங்கோதை

... எதிர்நோக்கு எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்.

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 19.12.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J. நேதாஜி, அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5

எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.கீர்த்தி, அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர் / 6ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ரமேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிர்நோக்குஎதிர்மனுதார்கள்/7 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்கப்படவேண்டியவர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராக தவறியதால் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர் உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

<u>உத்தரவு</u>

1. கடந்த 17.03.2018 தேதியன்று காலமான 1ம் பிரதிவாதி தசரதன் என்பவரின் வாரிசுகளான எதிர்நோக்கு எதிர்மனுதாரர்களை 7 முதல் 10 பிரதிவாதிகளாக வழக்கில் கட்சி சேர்த்து அசல் வழக்கை தொடர்ந்து நடத்த தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைத்தொகுப்பு கட்டளை 22 விதி 4–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>–

இம்மனுவில் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், மனுதாரருக்காவும், மற்ற வாதிகளுக்காகவும், பொது அதிகார முகவர் என்ற ஓதாவில் தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு பிரதிவாதிகள் மீது நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் 1ம் பிரதிவாதி தசரதன் என்பவர் கடந்த 17.03.2018 அன்று காலமாகிவிட்டார் என்றும், மேற்படி 1ம் பிரதிவாதி

காலமான விவரம் மனுதாரர்களுக்கு கடந்த 25.06.2019 அன்று பிரதிவாதிகளின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தபோது தான் தெரிய வந்தது என்றும், காலமான 1ம் பிரதிவாதிக்கு அவருடைய மனைவி ஷேசம்மாள், மகள்கள் முத்துலட்சுமி, கோவிந்தம்மாள் மற்றும் பூங்கோதை ஆகியோர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள் என்றும், மேற்படி நபர்களை அசல் வழக்கில் உரிய தரப்பினர்களாக சேர்க்க வாரிசு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், காலமான 1ம் பிரதிவாதி நல்லேரி என்ற கிராமத்தில் வசித்து வந்தார் என்றும், மனுதாரர் சென்னையில் பணிபுரிந்து வருவதால் 1ம் பிரதிவாதியின் இறப்பு குறித்து பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்த பின்னர்தான் தெரிய வந்ததாகவும், காலமான 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளாக வழக்கில் கட்சி சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடவேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும் என்றும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு பாதகமும் கிடையாது என்றும், நீதியின் பொருட்டு இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியது அவசியமும் நியாயமுமாய் உள்ளது என்றும், அல்லாத பட்சம் பொறுத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே, காலமான 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை தாவாவில் கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தாக்கல் செய்து 3, 4 எதிர்மனுதாரர்கள் அடாப்ட் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், சங்கதிகள்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மோசவிதமானது, தள்ளுபடிக்கு அருகமானது என்றும், எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டியது

என்றும், மேற்படி அசல் வழக்கு 1ம் பிரதிவாதி தசரதன் என்பவர் 17.03.2018 ல் காலமாகிவிட்டார் என்றும், மேற்படி விவரம் கடந்த 25.06.2019 ம் தேதி பிரதிவாதிகளின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்த பிறகுதான் தெரியவந்தது என்றும், மேலும், அபிடவிட்டில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் சரியல்ல என்றும், 1ம் பிரதிவாதி இறந்து சுமார் 15 மாதங்கள் கழித்து வாரிசு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட பிறகு நிரந்தர தடை உத்தரவு வழக்கில் வாரிசுகளை சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், வேண்டுமென்றே உத்தேச எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்திற்கு அலைக்கழிக்க வேண்டுமென்று தொடரப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மனுதாரர்கள் /எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை, இரு தரப்பிலும் வாதுரை கேட்கப்பட்டது.

6. இரு தரப்பிலும் வாதம் கேட்கப்பட்டது, வழக்கின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்களின் மனுவானது அசல் வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், இந்நிலையில் 1ம் பிரதிவாதி கடந்த 17.03.2018 ல் காலமாகிவிட்டதாகவும், மேற்படி 1ம் பிரதிவாதியின் இறப்பு குறித்த விவரம் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில்

தெரிவித்தபோது தான் மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும், காலமான 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7 முதல் 10 பிரதிவாதிகளாக வழக்கில் சேரத்து அசல் வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும் என்றும், வாதிடப்பட்டது. மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதி காலமாகி 15 மாதங்கள் கழித்து இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு நிரந்தர தடையுறுத்துக்கட்டளை வழக்கு என்பதால் காலமான 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான உத்தேச தரப்பினர்களை இந்த அசல் வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்றும், தாவா சொத்துக்களில் மேற்படி நபர்களால் மனுதாரர்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருவதாகவும், மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. நிரந்தர தடையுறுத்துக்கட்டளை வழக்கில் பிரதிவாதி காலமான பிறகும் அவரது வாரிசுகளால் வாதிகளின் தாவா சொத்துக்களில் உள்ள அனுபவத்தில் இடையூறு ஏற்படும் பட்சத்தில் காலமான பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்த்து வழக்கினை மேற்கொண்டு நடத்தலாம் என மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நபர்கள் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமத்திற்கான காரணம் ஏற்புடையதாக உள்ளதாலும், எதிர்நோக்கு எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் விடும் பட்சத்தில் தேவையற்ற குழப்பங்களையும், இதன் விளைவாக எழக்கூடிய வழக்கு நடவடிக்கைகள்

பெருக்கத்தையும் தவிர்கவும் பொருட்டு (To avoid multiplicity of proceedings), வழக்கின் தேவையான தரப்பினர்களை சேர்ப்பதின் வாயிலாக, அசல் வழக்கில் முழுமையான தீர்வினை எட்டும் பொருட்டும், மனுவின் எதிர்நோக்கு எதிர்மனுதாரர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேற்படி எதிர்நோக்கு தரப்பினர்களை வழக்கில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டும், மனுவினை அனுமதிப்பதே நீதியின்பால் சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**இறுதியாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. விளைவாக, கடந்த 17.03.2018 ம் தேதி காலமான 1ம் பிரதிவாதி தசரதன் என்பவரின் வாரிசுகளான எதிர்நோக்கு எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 7 முதல் 10 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து அசல் வழக்கை மேல்நடத்த மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள உரிமையியல் நடைமுறைத்தொகுப்பு, கட்டளை 22, விதி 4–ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தர்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் படித்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 05–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.01.05 16:21:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வந்தவாசி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்.</u> இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்.</u> இல்லை.

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.01.05 16:21:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.